# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1889 - 2014 නොවැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2014.11.14

*1889 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1763 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

**கல்வி அமைச்சு**

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களின் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2014

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.09.05 ஆந் திகதிய 1879 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களின் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2014, வாசக இலக்கம் 1 இல் அவ்வவ் பாடங்களின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள " சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்" என்ற வாசகம் நீக்கப்பட்டுள்ளது.

இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மாற்றமின்றி காணப்படும்.

அநுர திசாநாயக்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

"இசுருபாய",
கல்வி அமைச்சு,
பலவத்த,
பத்தரமுல்லை,
2014, ஒற்றோபர் 30.

11-345

---

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2014

நாடு பூராகவும் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களில் இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த சிவில், பொறிமுறை, புகையிரத திணைக்களத்தின் மின் (கனதி மற்றும் இலகு) பொறியியல் ஆகிய தொகுதிகளைச் சார்ந்த பதவிகளில் நிலவுகின்ற வெற்றிடங்கள் தொடர்பாக தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் (முன்னர் தொழில்நுட்ப உதவியாளர்) அல்லது புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ பதவி வகிக்கும் அலுவலர் அல்லது ஏனைய அரசாங்க சேவையில் மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிகின்ற இலங்கை தொழில்நுட்ப சேவைக்குரிய நியமன அதிகாரியினால் அனுமதி அளிக்கப்பட்ட தகைமைபெற்ற தொழில்நுட்ப அலுவலர்களிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு திணைக்களத் தலைவர் ஊடாக "பொறியியல், சேவைப் பணிப்பாளர், பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, கொழும்பு 7" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை பொறியியல் சேவையின் பதவிகள் தொடர்பான ஆட்சேர்ப்பு (மட்டுப்படுத்தப்பட்ட) - 2014" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் முடிவுத் திகதி 2014.12.15 ஆகும்.

**குறிப்பு.**- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான ஆவணம் தபாலில் காணாமற் போனமை தொடர்பாக தாமதமாகச் செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்கு பரீட்சார்த்திகளே பொறுப்பேற்றல் வேண்டும்.

1. **ஆட்சேர்ப்பு முறை :**

1.1 அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட புள்ளி வழங்கும் நடைமுறைகளுக்கு அமைய நேர்முகப் பரீட்சைச் சபையின் மூலம் சேவை மூப்பு மற்றும் திறன் என்பன தொடர்பாக வழங்கப்படும் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு தேர்ந்தெடுக்கப்படும்.

1.2 மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின்கீழ் நியமனக் கடிதம் ஒன்றின் மூலம் இ. பொ. சே. III ஆந் தரத்திற்கு அலுவலர்கள் ஆட்சேர்க்கப்படும்போது, அவர்களது சேவைத் தொகுதிகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1836/6 ஆம் இலக்க 2013, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை 1 இற்கமைய தீர்மானிக்கப்படும்.

1.2.1 நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி மற்றும் நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கையினர் பற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் தீர்மானிக்கப்படும். நிலவுகின்ற வெற்றிடங்களின் சிறு தொகையினரை அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரமுண்டு.

2. **சேவை நிபந்தனைகள் :**

2.1 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 1836/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு அரச சேவை நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கை பொறியியலாளர் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நியமங்களுக்கும், நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதும், எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும், அரச சேவை நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் கீழ்ப்பட்டு தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் சேவையின் தரம் III இற்கு நியமனம் செய்யப்படுவர்.

2.2 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

2.3 இப்பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் ஓராண்டு (1) பதில் கடமையாற்றும் கால எல்லைக்கு உட்படுதல் வேண்டும்.

2.4 எனினும், மூன்று (3) மூன்றாண்டுகளுள் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

2.5 இப்பதவியைப் பொறுப்பேற்ற திகதியிலிருந்து 5 ஆண்டுகளைத் தாண்ட முன்னர் அரசாங்க கொள்கைக்கு இணங்க அரச கரும மொழி தேர்ச்சியைப் பெற்றுக்கொள்வது பற்றி உறுதிப்படுத்தல் வேண்டும். நீங்கள் இப்பதவி தொடர்பாக தகைமை பெற்றுக்கொண்டது சிங்கள மொழியூடாக எனில், உங்களது அடுத்த அரச கரும மொழி தமிழ் ஆகும். அவ்வாறே நீங்கள் பதவி தொடர்பாக தகைமை பெற்றுக்கொண்டது தமிழ் மொழியில் எனில், உங்களது அடுத்த அரச கரும மொழி சிங்கள மொழி ஆகும். 2014.01.21 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 01/ 2014 இன் ஏற்பாடுகள் மற்றும் இதில் உள்ளடங்குகின்றன.

2.6 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப்பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் பிற கட்டளைகளுக்கும் இப்பதவி உட்பட்டதாகும்.

2.7 நியமனம் பெற்றவர்கள், இந்நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

2.8 நியமனம் பெற்றவர்கள், அரசாங்க சேவை போன்றே மாகாண அரசாங்க சேவையிலும் சேவையாற்றுவதற்குக் கட்டுப்பட்டவர்களாவர்.

3. **சம்பள அளவுத் திட்டம்**.- இப்பதவிக்கு, பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 06/ 2006 ஐக் கொண்ட சம்பள சுற்றறிக்கைக்கமைய SL- 1-2006, ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 (மாதாந்தம்) ஆன சம்பளத் திட்டம் உரித்துடையதாகும்.

4. **தகைமைகள்**.- வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று பின்வரும் தகைமைகளுள் ஏதேனுமொரு தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும் :-

4.1 அடிப்படைத் தகைமைகள் :

4.1.1 நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவைக்குரிய அலுவலராக 15 ஆண்டுகளைவிடக் குறையாத சேவைக் காலத்துடன், அதில் ஆகக்குறைந்தது 5 ஆண்டுகள் I ஆம் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டு சேவையாற்றியிருத்தல் வேண்டும். மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் சிரேஷ்ட தொழில்நுட்ப பரீட்சையில் முழுமையாகச் சித்தியெய்தியிருத்தல்.

4.1.2 புகையிரதத் திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ பதவியொன்றில் பணிபுரியும் அலுவலரொருவர், புகையிரதத் திணைக்களத்தில் 15 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக்காலத்துடன் அதில் ஆகக்குறைந்தது 5 ஆண்டுகள் அச்சேவையில் I ஆம் தரத்திற்கு பதவியுயர்வு பெற்று பணியாற்றியிருத்தல் வேண்டும்.

4.1.3 இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப அலுவலராக 15 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக்காலத்துடன் அதில் ஆகக்குறைந்தது 5 ஆண்டுகள் அச்சேவையில் I ஆம் தரத்திற்கு பதவியுயர்வு பெற்று பணியாற்றியிருத்தல் மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் அரசாங்க தொழில்நுட்ப அலுவலர்கள் தொடர்பான மூன்றாவது பரீட்சையில் (1979 சேவைப் பிரமாணம்) முழுமையாகச் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

4.1.4 இலங்கை தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப அலுவலராக 21 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக்காலத்துடன் அச்சேவையில் விசேட தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டிருத்தல் மற்றும் அச்சேவையில் 1 ஆம் தரத்தில் 5 ஆண்டுகள் பணியாற்றியிருத்தல் வேண்டும். மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் அரசாங்க தொழில்நுட்ப அலுவலர்கள் தொடர்பான இரண்டாவது பரீட்சை (1979 சேவைப் பிரமாணம்) முழுமையாகச் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

4.2 நிபந்தனைகள் மற்றும் கட்டளைகள் :

4.2.1 விண்ணப்பங்கள் அனுப்பப்படும் சந்தர்ப்பத்தில், அலுவலர் அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2.2 அரசாங்க சேவை ஆணைக்குழுவினால், தீர்மானிக்கப்படுகின்ற இந்நியமனம் அமுல்படுத்தப்படும் திகதியில் நியமிக்கப்படவுள்ள எந்தவொரு அலுவலரும் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.

4.2.3 வர்த்தமானி அறிவித்தலில் பூரணப்படுத்தியிருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள தினத்தன்று, 5 ஆண்டுகால முழுமையான, திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

4.2.4 நீர்ப்பாசனத் திணைக்களத்தில், வெற்றிடமாகவுள்ள இலங்கைப் பொறியியலாளர் சேவையின் III ஆம் தரம் பதவி தொடர்பாக விண்ணப்பிக்கும்போது அத்திணைக்களத்தில் பொறியியல் உதவியாளராக தொடர்ச்சியாக சேவையில் ஈடுபட்டிருப்பது அவசியமாகும்.

4.2.5 புகையிரதத் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள இலங்கைப் பொறியியலாளர் சேவையின் பதவி தொடர்பாக விண்ணப்பிக்கும்போது அத்திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ பதவியொன்றை வகிக்கும் அலுவலராக தொடர்ச்சியாக சேவையில் ஈடுபட்டிருப்பது இன்றியமையாததாகும்.

5. **தேகாரோக்கியம்**.- எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரியதான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லாவிதத்திலும் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

6. **பிற தகைமைகள் :**

6.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் அச்சேவையில் உடன் முன்னரான 5 ஆண்டுகால திருப்திகர மான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

6.2 விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனைத்து தகைமைகளையும் நிபந்தனைகளையும் எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

7. **புள்ளி வழங்கும் நடைமுறை :**

| | |
|---|---|
| சேவை அனுபவம் | - உச்ச புள்ளிகள் 60 |
| தொழில்நுட்ப அறிவு | - உச்ச புள்ளிகள் 20 |
| கல்வி மற்றும் பிற தகைமைகள் | - உச்ச புள்ளிகள் 15 |
| நேர்முகப் பரீட்சையின் போதான திறன் | - உச்ச புள்ளிகள் 5 |
| மொத்தப் புள்ளிகள் | - 100 புள்ளிகள் |

8. **ஆள் ஆளடையாளம்**.- பின்வரும் ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

* ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
* செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

9. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறை விதிகள், காலத்துக்குக்காலம் அரசாங்க சேவை சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் நிறைவேற்றுத் தர சேவைத் தொகுதியின் III ஆம் தரத்திற்கு உரியதான சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களின் நிபந்தனைகள் ஆகியன இப்பதவிக்கு ஏற்புடையதாகும்.

10. இங்கு நடைமுறைகள் எனக் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரமுண்டு.

11. இந்த வர்த்தமானப் பத்திரிகையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் விளம்பரத்தில் ஏதேனும் ஒரு மொழியில் முன்பின்னரான முரண்பாடுகள் ஏற்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான விளம்பரமே சரியானது எனக் கருதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

பி. பீ. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொறியியலாளர் சேவையின் தரம் III இற்கு அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2014**

1. அலுவலரின் முழுப்பெயர் :----.
2. அலுவலரின் பெயர் முதலெழுத்துக்களுடன் :----.
3. தற்போது பணிபுரியும் அலுவலகம் (அமைச்சு/திணைக்களம்/மாகாண சபை/உள்ளூராட்சி நிறுவனம்) :----.
4. பொறியியல் துறை (சிவில் பொறிமுறை/மின் (கனதி மற்றும் இலகு) :----.
5. அலுவலக முகவரி :----.
6. அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில மூல எழுத்துக்களில்) :----.
7. தொலைபேசி இல. :
நிரந்தர :----.
கையடக்க தொலைபேசி :----.
8. (அ) பிறந்த திகதி :----.

ஆண்டு ----, மாதம் ----, திகதி ----.

(ஆ) தேசிய ஆளடையாள அட்டை இல. :----.
9. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று வயது :
வருடங்கள் ----, மாதங்கள் ----. நாட்கள் ----.
10. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியல் உதவியாளர் சேவையின் அலுவலர்/புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் அலுவலர்/இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (முன்னர் ந. ம. தொ. சேவை) ஆக அரசாங்க சேவையில் இணைந்துகொண்ட தினம் :----.
11. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியல் உதவியாளர் சேவையின் அலுவலர்/ புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் அலுவலர்/இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (முன்னர் ந. ம. தொ. சேவை) ஆக அரசாங்க சேவையில் பதவி உறுதிப்படுத்தப்பட்ட திகதி :----.
12. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியல் உதவியாளர் சேவையின் அலுவலர்/புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் அலுவலர்/இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (முன்னர் ந. ம. தொ. சேவை) ஆக அரசாங்க சேவையில் இணைந்த அலுவலகம் (அமைச்சு/திணைக்களம்/மாகாண சபை/உள்ளூராட்சி நிறுவகம்) :----.
13. தற்போதைய அலுவலகம் :----.
14. தற்போதைய வகுப்பு/தரம் :----.
15. ஒவ்வொரு வகுப்பு/தரத்திற்கு நியமனம் பெற்ற/பதவியுயர்வு பெற்ற/உள்ளீர்க்கப்பட்ட திகதியுடன் பணிபுரிந்த கால எல்லை வரிசைப்படி முறையே (சம்பளமற்ற விடுமுறை எடுத்திருப்பின் அது பற்றியும் குறிப்பிடுதல் வேண்டும்.) :

| சேவையின் பெயர் | வகுப்பு/ தரம் | கால எல்லை திகதியில் இருந்து வரை | சேவைக்காலம் வருடம், மாதம், திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

* விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் உள்ளபடி குறித்த ஆவணங்கள் உண்மையான பிரதிகள் என உறுதிப்படுத்தப்பட்டு இணைக்கப்பட வேண்டும்.

16. 2013.11.11 ஆந் திகதிய 1836/6 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.3.1.2 பிரிவுக்கமைய ஆகக்குறைந்த தகுதி பெற்றுள்ளது பற்றி (குறித்த நிரலில் x குறியீட்டை இடுக. பெறுபேற்று ஆவணங்கள் உண்மையானவையென உறுதிப்படுத் தப்பட்டு இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.).

(i) நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியலாளர் சேவைக்குரிய அலுவலராக 15 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக் காலத்துடன் அதில் ஆகக்குறைந்தது 5 ஆண்டுகள் I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டு பணியாற்றியிருத்தல் மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படும் சிரேஷ்ட தொழில்நுட்பவியலாளர் பரீட்சையில் முழுமையாக சித்தியெய்திருத்தல். ☐

சிரேஷ்ட தொழில்நுட்பவியலாளர் பரீட்சையை திருப்திகர மாகப் பூரணப்படுத்திய திகதி ........................ (இணைப்பு 1)

(ii) புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ பதவியொன்றை வகிக்கும் அலுவலர், அத்திணைக்களத்தில் 15 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக்காலத்துடன் அதில் ஆகக்குறைந்தது 5 ஆண்டுகள் I ஆம் தரத்திற்கு தரமுயர்த்தப் பட்டு சேவையாற்றியிருத்தல். ☐

(iii) இலங்கை தொழில்நுட்ப சேவையின் அலுவலர் ஒருவராக 15 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக்காலத்துடன், அதில் ஆகக்குறைந்தது 5 ஆண்டுகள் அந்த சேவையில் I ஆம் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டு பணியாற்றியிருத்தல் மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் அரசாங்க தொழில்நுட்ப அலுவலர்கள் தொடர்பான மூன்றாவது பரீட்சை (1979 ஆம் பிரமாணக் குறிப்பு) முழுமையாக சித்தியெய்தியிருத்தல். ☐

| பரீட்சை (1979 ஆம் பிரமாணக் குறிப்பு) | துறை (சிவில்/ பொறிமுறை) | தகைமை திருப்திகரமாக பூரணப்படுத்தப் பட்ட திகதி** |
|---|---|---|
| 1 ஆவது பரீட்சை | | |
| 2 ஆவது பரீட்சை | | |
| 3 ஆவது பரீட்சை | | |

**(இணைப்பு 2 அல்லது 3)

(iv) இலங்கை தொழில்நுட்ப சேவையின் அலுவலர் ஒருவராக 21 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக்காலத்துடன், அந்தச் சேவையில் விசேட தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டு இருத்தல் மற்றும் அச்சேவையில் I ஆம் தரத்தில் 5 ஆண்டுகள் பணியாற்றியிருத்தல் மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் அரசாங்க தொழில்நுட்ப அலுவலர்கள் தொடர்பான இரண்டாவது பரீட்சை (1979 ஆம் பிரமாணக் குறிப்பு) முழுமையாகச் சித்தியெய்தியிருத்தல். ☐

| பரீட்சை (1979 ஆம் பிரமாணக் குறிப்பு) | துறை (சிவில்/ பொறிமுறை) | தகைமை திருப்திகரமாக பூரணப்படுத்தப் பட்ட திகதி** |
|---|---|---|
| 1 ஆவது பரீட்சை | | |
| 2 ஆவது பரீட்சை | | |
| | | |

**(இணைப்பு 2 அல்லது 3)

17. விண்ணப்பதாரியின் திருப்திகரமான சேவைக்காலம் :

(1) உங்களது சேவைக்காலத்தினுள் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருப்பின் குற்றத்தின் தன்மை, வழங்கப்பட்ட தண்டனை மற்றும் தண்டனை விதிக்கப்பட்ட திகதி என்பனவற்றைக் குறிப்பிடுக :----.

(2) கடந்த ஐந்து (5) வருடங்களில் சம்பள ஆண்டேற்றங்களை ஈட்டியுள்ளீர்களா என்பது பற்றி :----.

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்து கின்றேன். என்னால் தரப்பட்ட தகவல்கள் பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் நட்டஈடு இன்றி நியமனம் இரத்துச்செய்யப் படும் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியல் உதவியாளர் சேவையின் அலுவலர்/புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ சேவையின் அலுவலர்/அரசாங்க சேவையின்/ மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிகின்ற இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (முன்னர் ந. ம. தொ. சேவை) ஆக தற்போது இத்திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற திரு./திருமதி/செல்வி ....................................... இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிப்பதற்கு தகைமை பெற்றுள்ளதுடன், அவ்வலுவலரினால் சமர்ப்பிக்கப்பட்ட இவ்விண்ணப்பத்தை தகுந்த நடவடிக்கையின் பொருட்டு சமர்ப்பிக்கின்றேன். மேலும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டுள்ளது/எடுக்கப்பட வில்லை எனவும், எதிர்காலத்தில் அவ்வாறான எதுவித நடவடிக் கையும் எடுப்பதற்கான காரணிகள் முன்வைக்கப்பட்டுள்ளன/ முன்வைக்கப்படவில்லை எனவும் சான்றுரைக்கின்றேன். (தேவையற்ற சொற்களை நீக்கிவிடவும்).

----,
கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை
(செயலாளர்/பிரதம செயலாளர்/
திணைக்களத் தலைவர்).

திகதி :----.

இணைப்பு 1

**சிரேஷ்ட தொழில்நுட்ப பரீட்சை முடிவுகள்**

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்

பெயர் :----.

செய்முறை பரீட்சை :

| விடயம் | | புள்ளிகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ |
| முதலாம் பாதி | | | | | |
| பகுதி I | மட்ட அளவையியல் (செய்முறைப் பரீட்சை) (>50%) | | | | |
| பகுதி II | நில அளவையியல் (செய்முறைப் பரீட்சை) (>50%) | | | | |

எழுத்துமூலப் பரீட்சை :

| விடயம் | | புள்ளிகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ |
| முதலாம் பாதி : | | | | | |
| பகுதி III | (அ) கட்டமைப்பு கோட்பாடு மற்றும் பொருட்களின் வலிமை கோட்பாடு) | | | | |
| | (ஆ) நீரியல் | | | | |
| இரண்டாம் பாதி : | | | | | |
| பகுதி I | (அ) வடிவமைப்பு, வரைதல் மற்றும் நியம விபரக் குறிப்பு | | | | |
| | (ஆ) நீர்ப்பாசனம் | | | | |
| பகுதி II | (அ) கணிய அளவையியல் | | | | |
| | (ஆ) தாபனக்கோவை, நிதிப்பிரமாணம் மற்றும் திணைக்கள நடைமுறைகள் | | | | |

எழுத்துமூலப் பரீட்சையின் தேர்ச்சி பெறுவதற்குரிய ஆகக்குறைந்த புள்ளிகளின் மட்டம் 40% ஆகும்.

எழுத்துமூலப் பரீட்சைகளின் மொத்தப் புள்ளிகளின் சராசரி (>50%)

**குறிப்பு**.- முதலாம் பாதியின் பகுதி I மற்றும் பகுதி II இல் சித்தி பெறுவதற்கு பரீட்சார்த்திகள் அந்த ஒவ்வொரு பகுதியிலும் ஆகக்குறைந்தது 50% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். மிகுதி எந்தவொரு வகுதியிலும் இருந்து ஒவ்வொரு பாடம் சம்பந்தமாகவும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொண்டு அப்பாடத்தில் சித்தியெய்திய போதிலும் பரீட்சையில் சித்தியடைவதற்கு எல்லா எழுத்துமூல பரீட்சைத் தாளிலும் 50% இற்குக் குறையாத சராசரி புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

ஒரு தடவையில் ஒரு பாடம் அல்லது அதற்கு மேல் பரீட்சைக்குத் தோற்றுவதுடன் நான்கு தடவைகளுக்கு மேற்படாத வகையில் எல்லாப் பகுதிகளிலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவைகளை திருப்திசெய்வதுடன் பரீட்சையில் சித்தியெய்துவதன் மூலம் சிரேஷ்ட தொழில்நுட்ப பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

இணைப்பு 2

**அரசாங்க சேவை தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பரீட்சை (சிவில்/பொறிமுறை)**

*1979 ஆம் பிரமாணக் குறிப்பு - இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்*

பெயர் :----.

1 ஆம் பரீட்சை (சிவில்)

கட்டாயப் பாடம் :

| விடயம் | பாட இல. | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... |
| * அளவையியல் மற்றும் மட்ட அளவையியல் எழுத்துமூலப் பரீட்சை (>35%) | | | | | | | |
| * அளவையியல் செய்முறைப் பரீட்சை (>35%) | | | | | | | |
| * மட்ட அளவையியல் செய்முறைப் பரீட்சை (>35%) | | | | | | | |
| அளவையியல் மற்றும் மட்ட அளவையியல் (கீழ் பரீட்சைத் தாள்) | 03 | | | | | | |

| விடயம் | பாட இல. | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... |
| கணிதம் (கீழ் பரீட்சைத்தாள்) | 01 | | | | | | |
| கணிய அளவையியல் (கீழ் பரீட்சைத்தாள்) | 02 | | | | | | |
| வடிவமைப்பு, வரைதல் மற்றும் வரைதிறன் | 04 | | | | | | |

விருப்பத்திற்குரிய பாடங்கள் : கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் இரண்டு (02) :

| விடயம் | பாட இல. | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... |
| கட்டிட அடிப்படை நிர்மாணம் மற்றும் பராமரிப்பு | 05 | | | | | | |
| நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு | 06 | | | | | | |
| வேலைத்தள கட்டுப்பாடு | 07 | | | | | | |
| வீதிகள் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு | 08 | | | | | | |

எழுத்துமூலப் பரீட்சையின் தேர்ச்சி பெறுவதற்குரிய ஆகக்குறைந்த புள்ளிகளின் மட்டம் 40% ஆகும்.

எழுத்துமூலப் பரீட்சைகளின் மொத்தப் புள்ளிகளின் சராசரி (>45%)........................

*2 ஆம் பரீட்சை (சிவில்)*

*கட்டாயப் பாடம் :*

| *விடயம்* | *பாட இல.* | *புள்ளிகள்* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *ஆண்டு ...........* | *ஆண்டு ...........* | *ஆண்டு ...........* | *ஆண்டு ...........* | *ஆண்டு ...........* | *ஆண்டு ...........* |
| * *அளவையியல் மற்றும் மட்ட அளவையியல் எழுத்துமூலப் பரீட்சை* (>35%) | | | | | | | |
| * *அளவையியல் செய்முறைப் பரீட்சை* (>35%) | | | | | | | |
| * *மட்ட அளவையியல் செய்முறைப் பரீட்சை* (>35%) | | | | | | | |
| *அளவையியல் மற்றும் மட்ட அளவையியல்* | *23* | | | | | | |

| *விடயம்* | *பாட இல.* | *புள்ளிகள்* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *ஆண்டு ...........* | *ஆண்டு ...........* | *ஆண்டு ...........* | *ஆண்டு ...........* | *ஆண்டு ...........* | *ஆண்டு ...........* |
| *கணிதம் (உயர் பரீட்சைத்தாள்)* | *21* | | | | | | |
| *கணிய அளவையியல் (உயர் பரீட்சைத்தாள்)* | *22* | | | | | | |
| *வரைதல்* | *24* | | | | | | |

*விருப்பத்திற்குரிய பாடங்கள் : கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் மூன்று (03) :*

| *விடயம்* | *பாட இல.* | *புள்ளிகள்* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *ஆண்டு ...........* | *ஆண்டு ...........* | *ஆண்டு ...........* | *ஆண்டு ...........* | *ஆண்டு ...........* | *ஆண்டு ...........* |
| *கட்டிட நிர்மாணம் (உயர் பரீட்சைத் தாள்)* | *25* | | | | | | |
| *நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு* | *26* | | | | | | |
| *வீதிகள் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு* | *27* | | | | | | |
| *பாலங்கள் மற்றும் பாரிய கட்டமைப்பு நிர்மாணம் மற்றும் பராமரிப்பு* | *28* | | | | | | |
| *வேலை அமைப்புக்கள்* | *29* | | | | | | |

*எழுத்துமூலப் பரீட்சையின் தேர்ச்சி பெறுவதற்குரிய ஆகக்குறைந்த புள்ளிகளின் மட்டம் 40% ஆகும்.*

*எழுத்துமூலப் பரீட்சைகளின் மொத்தப் புள்ளிகளின் சராசரி* (>45%)........................

*3 ஆம் பரீட்சை (சிவில்) :*

*கட்டாயப் பாடம் :*

| விடயம் | பாட இல. | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... |
| * அளவையியல் மற்றும் மட்ட அளவையியல் எழுத்துமூலப் பரீட்சை (>35%) | | | | | | | |
| * அளவையியல் செய்முறைப் பரீட்சை (>35%) | | | | | | | |
| * மட்ட அளவையியல் செய்முறைப் பரீட்சை (>35%) | | | | | | | |
| அளவையியல் மற்றும் மட்ட அளவையியல் | 48 | | | | | | |

| விடயம் | பாட இல. | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... |
| குடிசார் பொறியியல் I | 41 | | | | | | |
| குடிசார் பொறியியல் III | 44 | | | | | | |
| குடிசார் பொறியியல் IV | 45 | | | | | | |
| கட்டிட கணிய அளவையியல் மற்றும் மதிப்பீடு | 46 | | | | | | |
| கட்டிடக் கலை வரைபு | 47 | | | | | | |

விருப்பத்திற்குரிய பாடங்கள் : கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் ஒன்று (01) :

| விடயம் | பாட இல. | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... |
| குடிசார் பொறியியல் II | 42 | | | | | | |
| வீதிகள் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு : | 43 | | | | | | |

எழுத்துமூலப் பரீட்சையில் தேர்ச்சி பெறுவதற்குரிய ஆகக்குறைந்த புள்ளிகளின் மட்டம் 40% ஆகும்.

எழுத்துமூலப் பரீட்சைகளின் மொத்தப் புள்ளிகளின் சராசரி (>45%)........................

*இணைப்பு 3*

**அரசாங்க சேவை தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பரீட்சை (சிவில்/பொறிமுறை)**

*1979 ஆம் பிரமாணக் குறிப்பு - இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்*

பெயர் :----.

*1 ஆம் பரீட்சை (பொறிமுறை)*

எல்லாப் பாடங்களும் கட்டாயப் பாடங்களாகும் :

| விடயம் | பாட இல. | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... |
| கணிதம் (கீழ் பரீட்சைத்தாள்) | 01 | | | | | | |
| பொறிமுறை கணிய அளவையியல் | 09 | | | | | | |
| பொறிமுறை வரைபு மற்றும் வரைதிறன் | 10 | | | | | | |
| வேலைத்தள பயிற்சி | 11 | | | | | | |
| செய்முறை வேலை (பொருத்தல், தச்சு முதலான) | 12 | | | | | | |
| அளவையியல் மற்றும் மட்ட அளவையியல் (செய்முறை) | 13 | | | | | | |

எழுத்துமூலப் பரீட்சையில் தேர்ச்சி பெறுவதற்குரிய ஆகக்குறைந்த புள்ளிகளின் மட்டம் 40% ஆகும்.
எழுத்துமூலப் பரீட்சைகளின் மொத்தப் புள்ளிகளின் சராசரி (>45%)........................

*2 ஆம் பரீட்சை (பொறிமுறை)*

எல்லாப் பாடங்களும் கட்டாயப் பாடங்களாகும் :

| விடயம் | பாட இல. | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... |
| கணிதம் (உயர் பரீட்சைத்தாள்) | 21 | | | | | | |
| பொறிமுறை கணிய அளவையியல் (உயர் பரீட்சைத்தாள்) | 30 | | | | | | |
| பொறிமுறை வரைபு மற்றும் வரைதிறன் (உயர் பரீட்சைத்தாள்) | 31 | | | | | | |
| வேலைத்தள பயிற்சி | 32 | | | | | | |

எழுத்துமூலப் பரீட்சையில் தேர்ச்சி பெறுவதற்குரிய ஆகக்குறைந்த புள்ளிகளின் மட்டம் 40% ஆகும்.
எழுத்துமூலப் பரீட்சைகளின் மொத்தப் புள்ளிகளின் சராசரி (>45%)........................

*3 ஆம் பரீட்சை (பொறிமுறை)*
எல்லாப் பாடங்களும் கட்டாயப் பாடங்களாகும் :

| விடயம் | பாட இல. | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... |
| பொறிமுறைப் பொறியியல் I | 49 | | | | | | |
| பொறிமுறைப் பொறியியல் II | 50 | | | | | | |
| பொறிமுறைப் பொறியியல் III | 51 | | | | | | |
| பொறியியல் பொருளாதாரம் | 52 | | | | | | |
| பொறிமுறைப் பொறியியல் வரைவு | 53 | | | | | | |

எழுத்துமூலப் பரீட்சையில் தேர்ச்சி பெறுவதற்குரிய ஆகக்குறைந்த புள்ளிகளின் மட்டம் 40% ஆகும்.
எழுத்துமூலப் பரீட்சைகளின் மொத்தப் புள்ளிகளின் சராசரி (>45%)........................

*11-331*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.